நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள். 03.12.2021

**சாதாரணக்கூட்டம்**

அம்பாசமுத்திரம் நகர் மன்றத்தின் அவசரக்கூட்டம் 2021ம் வருடம் டிசம்பர் மாதம் 03ம் தேதி (03.12.2021) வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு தனி அதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 03.12. 2021 | 940 | **பொருள் எண்: 1**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் கீழ திருமஞ்சனம் சாலை மற்றும் கல்லிடைகுறிச்சி மெயின்ரோடு (பாலம்) ஆகிய இடங்களில் நதியுண்ணி கால்வாயில் கலக்கும் கழிவு நீரினை சுத்திகரிக்க DEWAT SYSTEM அமைக்கும் பணியினை 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 Untied Grant ன் கீழ் மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.46.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், மேற்காண் பணியினை திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>(ந.க.எண்: 1453 /2021 /இ1) | அனுமதிக்க ப்பட்டது |
| 03.12. 2021 | 941 | **பொருள் எண்: 2**<br>திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 74/செ.ம.தொ/செ 2021 நாள் 21.08.2021 ன் படி தினத்தந்தி தொழில்மலரில் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரம் 23.10.2021 ல் வெளியிடப்பட்டது. அதற்கான செலவினத் தொகை ரூபாய் 23688/– (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து அறுநூற்று எண்பத்து எட்டு மட்டும்) ஐ தினத்தந்தி திருநெல்வேலி என்ற பெயருக்கு இந்நகராட்சியின் வருவாய் பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>(ந.க.எண்: 1433 /2021 /இ1) | அனுமதிக்க ப்பட்டது |
| 03.12. 2021 | 942 | **பொருள் எண்: 3**<br>திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் கடிதம் ந.க.எண் 68/செ.ம.தொ/செ 2021 நாள் 30.08.2021 மற்றும் திருநெல்வேலி நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 3326/2018/ஆ4 நாள் 19.09.2021 ன் படி தினகரன் தொழில்மலரில் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் தொடர்பான விளம்பரம் 17.11.2021ல் வெளியிடப்பட்டது. அதற்கான செலவினத் தொகை ரூ 19656/– (ரூபாய் பத்தொன்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) KAL PUBLICATIONS (P) LTD என்ற பெயருக்கு இந்நகராட்சியின் வருவாய் பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>(ந.க.எண்: 1760 /2021 /இ1) | அனுமதிக்க ப்பட்டது |
| 03.12. 2021 | 943 | **பொருள் எண்: 4**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி, தாமிரபரணி ஆற்றினை பாதுகாக்கும் வகையில் தாமிரபரணி ஆற்றில் கலக்கும் கழிவுநீரை கலக்க விடாமல் தடுக்க ஆய்வு செய்ய 06.09.2021 அன்று வரப்பெற்ற (Sub Committee) குழுவின் திருநெல்வேலி மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் கழிவுநீர் மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்திட கேட்டு கொண்டதின் அடிப்படையில் கழிவுநீர் மாதிரிகளை பகுப்பாய்வு செய்ய ஆகும் செலவினத் தொகை ரூபாய் 20360/– ஐ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் திருநெல்வேலி என்ற பெயருக்கு இந்நகராட்சியின் வருவாய் பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>(ந.க.எண்: 178 /2021 /இ1) | அனுமதிக்க ப்பட்டது |

<table>
<tr>
<td>03.12.<br>2021</td>
<td>944</td>
<td>பொருள் எண்: 5<br>
தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021 – 22 ன் கீழ் நகர்ப்புறங்களில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் புதப்பிக்கப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டதின் அடிப்படையில் அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள 2 எண்ணம் பொதுக்கழிப்பிடங்களை பழுது பார்த்து பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு திட்டக்கருத்துரு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்பிக்கப்பட்டது. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க எண் 19089/21/இ2 நாள் 19.11.2021 ல் மேற்கண்ட பணிகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு வட்டி நிதி 2021–22 ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அம்பாசமுத்திரம் நகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படியான பொதுக்கழிப்பிடங்களை பழுது பார்த்து பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணியினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு வட்டி நிதி 2021–22ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றதின் முன் பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண் 20 பேரூந்து நிலையம் மற்றும் வார்டு எண் 14 அய்யனார்குளம் மேலரோடு பொதுகழிப்பறைகள் பழுது பார்த்து பராமரிக்கும் பணி.</td><td>3.00</td></tr>
</table>
(ந.க.எண் 1453/2021/இ1)</td>
<td>அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>03.12.<br>2021</td>
<td>945</td>
<td>பொருள் எண்: 6<br>
தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021 – 22 ன் கீழ் நகர்ப்புறங்களில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் புதப்பிக்கப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டதின் அடிப்படையில் அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள 2 எண்ணம் சமுதாய கழிப்பிடங்களை பழுது பார்த்து பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள ரூ.8.20 இலட்சத்திற்கு திட்டக்கருத்துரு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்பிக்கப்பட்டது. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க எண் 19089/21/இ2 நாள் 19.11.2021 ல் மேற்கண்ட பணிகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு வட்டி நிதி 2021–22 ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி அம்பாசமுத்திரம் நகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படியான சமுதாய கழிப்பிடங்களை பழுது பார்த்து பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.8.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணியினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு வட்டி நிதி 2021–22ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றதின் முன் பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண்4 ஊர்காடு மேலரத வீதி, வார்டு எண் 5 சோலைபுரம் தெற்கு தெரு சமுதாய கழிப்பறைகள் பழுது பார்த்து பராமரிக்கும் பணி.</td><td>8.20</td></tr>
</table>
(ந.க.எண் 1453/2021/இ1)</td>
<td>அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>03.12.<br>2021</td>
<td>946</td>
<td>
பொருள் எண்: 7<br>
அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–22 ன் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை G.O.(MS)No.99 நாள்:30.10.2021 ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அம்பாசமுத்திரம் நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி உள்ள சாலை பணிகள் மேற்கொள்ள இரண்டு உறை முறையில் (TWO COVER SYSTEM) ஒப்பந்தப்புள்ளிகள் 30.11.2021ல் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்பம்(Technical bid) 30.11.2021 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. Techniqal bid தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களின் விலைவிகிதம் (price bid) 01.12.2021 மாலை 4.00 மணியளவில் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் சிப்பம் I க்கான விலைவிகித ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>வேலை விபரம்</th><th>கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களின் பெயர்</th><th>மதிப்பீட்டிலிருந்து அதிகம் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">அம்பாசமுத்திரம் நகராட்சி 14000 5R122 காசிபநாதர் கோவில் தெரு புல எண் 252/2B, 140012 R 223 இந்திரா காலனி வடக்கு தெரு தெற்கு முடுக்கு, 140013 R 265 பெரியகுளம் காலனி மயானசாலை கிழக்கு, ஆரோக்கியாமாதா சாமில் தெரு 140014 R 279, 140021 R 424 முடப்பாலம் கல்லூரி தெற்கு தெரு தென்வடல் கிழமேல் தீர்த்தபதி பள்ளி சாலை, 140021 R 394 வேலாயுத நகர் காவேரி தெரு தென்வடல் தெரு, 140021 R 395 வேலாயுத நகர் காவேரி கிழக்கு மேற்கு தெரு 1, 140021 R 396 வேலாயுத நகர் காவேரி தெரு கிழக்கு மேற்கு தெரு 2 மற்றும் 140005 R 121 சோலைபுரம் தெற்கு தெரு புல.எண் 201/3 தார்சாலை அமைத்தல்<br><br>மதிப்பீடு ரூ. 77.08 இலட்சம்</td><td>திரு.B.சண்முக சுந்தரம், ஒப்பந்தகாரர், அம்பாசமுத்திரம்.</td><td>4.96% அதிகம்</td></tr>
<tr><td>திரு.பி.மாடசாமி ஒப்பந்தகாரர் திருநெல்வேலி</td><td>6.20% அதிகம்</td></tr>
</table>
(ந.க.எண்: 3071 /2021 /இ1)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>03.12.<br>2021</td>
<td>947</td>
<td>
பொருள் எண் 8<br>
அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–22 ன் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை G.O.(MS)No.99 நாள்:30.10.2021 ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அம்பாசமுத்திரம் நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி உள்ள சாலை பணிகள் மேற்கொள்ள இரண்டு உறை முறையில் (TWO COVER SYSTEM) ஒப்பந்தப்புள்ளிகள் 30.11.2021ல் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்பம்(Technical bid) 30.11.2021 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. Techniqal bid தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களின் விலைவிகிதம் (price bid) 01.12.2021 மாலை 4.00 மணியளவில் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் சிப்பம் I I க்கான விலைவிகித ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>வேலை விபரம்</th><th>கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களின் பெயர்</th><th>மதிப்பீட்டிலிருந்து அதிகம் / குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சி 140021 S153 வேலாயுதநகர் நைல் நதி தெரு முதல் (புதிய தெரு)</td><td>திரு.B.சண்முகசுந்தரம், ஒப்பந்தகாரர், அம்பாசமுத்திரம்.</td><td>4.94% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | தென்வடல் கிழமேல், 140021S178 முடப்பாலம் நியூகாலனி 2வது தெரு மற்றும் 140013 L114 சுப்பிரமணியபுரம் தங்கம்மன் கோவில் மேல முடுக்கு பேவர் பிளாக்சாலை அமைத்தல்<br><br>மதிப்பீடு ரூ. 14.03 இலட்சம் | திரு.பி.மாடசாமி ஒப்பந்தகாரர் திருநெல்வேலி | 5.91% அதிகம் |

(ந.க.எண்: 3071 /2021 /இ1)

| நாள் | தீர்மான எண் | பொருள் | முடிவு |
|---|---|---|---|
| 03.12. 2021 | 948 | பொருள் எண் 9 | அனுமதிக்கப்பட்டது |

**பொருள் எண் 9**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–22 ன் கீழ் பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை G.O.(MS)No.99 நாள்:30.10.2021 ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அம்பாசமுத்திரம் நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி உள்ள பணி மேற்கொள்ள இரண்டு உறை முறையில் (TWO COVER SYSTEM) ஒப்பந்தப்புள்ளிகள் 30.11.2021ல் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்பம்(Technical bid) 30.11.2021 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. Technical bid தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களின் விலைவிகிதம் (price bid) 01.12.2021 மாலை 4.00 மணியளவில் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகித ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலை விபரம் | கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களின் பெயர் | மதிப்பீட்டிலிருந்து அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1. | அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண் 21 ஆசிரியர் காலனி மெரிட் பள்ளி எதிரே பூங்கா அமைக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ. 50.00 இலட்சம் | திரு.B.சண்முகசுந்தரம், ஒப்பந்தகாரர், அம்பாசமுத்திரம். | 4.95% அதிகம் |
| | | திரு.பி.மாடசாமி ஒப்பந்தகாரர் திருநெல்வேலி | 6.02% அதிகம் |

(ந.க.எண்: 3071 /2021 /இ1)

| நாள் | தீர்மான எண் | பொருள் | முடிவு |
|---|---|---|---|
| 03.12. 2021 | 949 | பொருள் எண் 10 | அனுமதிக்கப்பட்டது |

**பொருள் எண் 10**

அம்பாசமுத்திரம் நகராட்சி நிர்வாக சம்பந்தமாக சென்னை, உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP (MD) 19659/2021, WP (MD) 20862/2021 மற்றும் WP (MD) 20863/2021 போன்ற வழக்குகள் நிலுவையில் இருந்து வருகின்றது. மேற்கண்ட வழக்குகளுக்கு கோர்ட்டில் ஆஜராகி தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கு வழக்கினை நடத்தும் வகைக்கு Standing Council Lowyer ஆக உள்ள திரு. M. ராஜராஜன் வழக்கறிஞர், மூன்று வழக்குகளுக்கு செலவு கட்டணம் ரூ 30,000/– (முப்பதாயிரம் மட்டும்) வழக்கறிஞர் கட்டணம் ரூ 7500x3=22500/– ஆவணங்கள் தயார் செய்ய 2500x3=7500 ஆக மொத்தம் ரூ 30,000/– கேட்டு கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(ந.க.எண்: 1821/2021 /இ1)

| நாள் | தீர்மான எண் | பொருள் | முடிவு |
|---|---|---|---|
| 03.12. 2021 | 950 | பொருள் எண் : 11 | அனுமதிக்கப்பட்டது |

**பொருள் எண் : 11**

அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலக பிரிவு வாகனம் எண் TN76AY 5891 JEEP நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் பழுது நீக்கம் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வ. எண். | வேலையின் விபரம் | ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகள் விபரம் | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ஜெனரல் மோட்டார்ஸ் திருநெல்வே | வெற்றிவேல் லேபர் ஒர்க்ஸ் | நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | |
| 1 | அம்பாசமுத்திரம் நகராட்சி வாகனம் எண் TN76AY 5891 JEEP. | 31750/- | 32485/- | 30020/- | குறைவான விலைப் புள்ளி ரூ.30020/– கொடுத்துள்ள நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்திற்கு அனுமதிக்கலாம். |

ந.க.எண் **1035/2021/எச்1**

---

03.12.2021 | 951

**பொருள் எண் : 12**

அம்பாசமுத்திரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் எண் TN76AX 6802 TATA ACE நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் பழுது நீக்கம் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| **வ. எண்.** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகள் விபரம்** | | | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|
| | | **ஜெனரல் மோட்டார்ஸ் திருநெல்வேலி** | **சுந்தரம் மோட்டார்ஸ் திருநெல்வேலி** | **நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் திருநெல்வேலி** | |
| 1 | அம்பாசமுத்திரம் நகராட்சி வாகனம் எண் TN76AX 6802 TATA ACE | 13210/- | 12520/- | 12310/- | குறைவான விலைப் புள்ளி ரூ.12310/– கொடுத்துள்ள நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்திற்கு அனுமதிக்கலாம். |

ந.க.எண் **1570/2021/எச்1**

அனுமதிக்கப்பட்டது

---

03.12.2021 | 952

**பொருள் எண் : 13**

அம்பாசமுத்திரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் எண் TN76AX 6787 TATA ACE நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் பழுது நீக்கம் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| **வ. எண்.** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகள் விபரம்** | | | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|
| | | **ஜெனரல் மோட்டார்ஸ் திருநெல்வேலி** | **சுந்தரம் மோட்டார்ஸ் திருநெல்வேலி** | **நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் திருநெல்வேலி** | |

அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சி வாகனம் எண் TN76AX 6787 TATA ACE</td><td>13800/-</td><td>12900/-</td><td>12400/-</td><td>குறைவான விலைப் புள்ளி ரூ.12400/– கொடுத்துள்ள நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்திற்கு அனுமதிக்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண் 1570/2021/எச்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>03.12.2021</td>
<td>953</td>
<td>
பொருள் எண் : 14<br>
அம்பாசமுத்திரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் எண் TN76AX 4313 TATA ACE நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் பழுது நீக்கம் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்
<table>
<tr><th rowspan="2">வ. எ ண்.</th><th rowspan="2">வேலையின் விபரம்</th><th colspan="3">ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகள் விபரம்</th><th rowspan="2">குறிப்பு</th></tr>
<tr><th>ஜெனரல் மோட்டார்ஸ் திருநெல்வேலி</th><th>சுந்தரம் மோட்டார்ஸ் திருநெல்வேலி</th><th>நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ் திருநெல்வேலி</th></tr>
<tr><td>1</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சி வாகனம் எண் TN76AX 4313 TATA ACE</td><td>17070/-</td><td>16110/-</td><td>15450/-</td><td>குறைவான விலைப் புள்ளி ரூ.15450/– கொடுத்துள்ள நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்திற்கு அனுமதிக்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண் 1570/2021/எச்1
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>03.12.2021</td>
<td>954</td>
<td>
பொருள் எண்: 15<br>
அம்பாசமுத்திரம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள்:13.11.2021 ன் படி 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 Tied Grant (50% Solid Waste Management) ன் கீழ் அண்ணாநகர் மற்றும் சங்கரன்கோவில் Micro compost centre க்கு சுற்று சுவர் கட்டும் பணியினை மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br>
(ந.க.எண்: 178 /2020 /இ1)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 03.12. 2021 | 955 | **பொருள் எண்: 16**<br><br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள்:13.11.2021 ன் படி 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 Tied Grant (50% Water supply) ன் கீழ் கோடாரன்குளம் இயல்பு நீரேற்று நிலையத்தில் 50HP மோட்டார், பம்ப் 1 எண்ணம் மற்றும் துாயரேற்று நிலையத்தில் 15HP மோட்டார், பம்ப் சப்ளை செய்யும் பணியினை மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br><br>(ந.க.எண்: 178 /2020 /இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 03.12. 2021 | 956 | **பொருள் எண்: 17**<br><br>அம்பாசமுத்திரம் நகராட்சி 15வது நிதிக்குழு மான்யத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள்:13.11.2021 ன் படி 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 Tied Grant (50% Solid Waste Management) ன் கீழ் வாகைக்குளம் பொட்டல் உரக்கிடங்கில் சுற்று சுவர் கட்டும் பணியினை மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br><br>(ந.க.எண்: 178 /2020 /இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 03.12. 2021 | 957 | **பொருள் எண்: 18**<br><br>அம்பாசமுத்திரம் நகராட்சி 15வது நிதிக்குழு மான்யத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள்:13.11.2021 ன் படி 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 Tied Grant (50% Solid Waste Management) ன் கீழ் உரக்கிடங்கில் உள்ள FSTPக்கு சேமிப்பு அறை மற்றும் கழிவறை கட்டும் பணியினை மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br><br>(ந.க.எண்: 178 /2020 /இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 03.12. 2021 | 958 | **பொருள் எண்: 19**<br><br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள்:13.11.2021 ன் படி 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 Tied Grant (50% Water supply) ன் கீழ் கோடாரன்குளம் இயல்பு மற்றும் துாய நீரேற்று நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்டும் பணியினை மேற்கொள்ள பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.<br><br>(ந.க.எண்: 178 /2020 /இ1) | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>03.12.<br>2021</td>
<td>959</td>
<td>பொருள் எண்: 20<br><br>இயக்குநர், நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண் 276/2020/A2 ன் படி 2021–22ம் ஆண்டுக்கான இந்நகராட்சியின் ஆண்டு பங்கு தொகையாக ரூ 30,000/– செலுத்த தெரிவிக்கப்படுகிறது. அதன்படி உரிய பங்கு தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>(ந.க.எண் 628/2021/சி1)</td>
<td>அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>03.12.<br>2021</td>
<td>960</td>
<td>பொருள் எண்: 21<br><br>தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பமின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016(Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)விதி 5, துணை விதி (1) ன் மூலம் அம்பாசமுத்திரம் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக (Electronic Service Delivery System)அமைப்பின் கீழ்https://tnurbanepay.tn.gov.in/என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வரிசை எண்</th><th colspan="3">மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர்</th><th>சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி</th></tr>
<tr><td>1</td><td colspan="3">2</td><td>3</td></tr>
<tr><td>1</td><td>குடிநீர் கட்டணம்<br>Water Charge</td><td>i</td><td>புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection</td><td rowspan="9">நகராட்சி ஆணையாளர்</td></tr>
<tr><td></td><td></td><td>ii</td><td>புதிய குடிநீர்இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection</td></tr>
<tr><td>2</td><td>தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance</td><td>i</td><td>திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting</td></tr>
<tr><td></td><td></td><td>ii</td><td>குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial)</td></tr>
<tr><td></td><td></td><td>iii</td><td>திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment</td></tr>
<tr><td></td><td></td><td>iv</td><td>திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting</td></tr>
<tr><td></td><td></td><td>v</td><td>தொழிற்சாலை பயன்பாடுபாதாளசாக்கடைஇணைப்புக்கானதடையின்மைசான்று<br>NOC for UGD Connection for Industrial</td></tr>
<tr><td>3</td><td>சுகாதார சான்றிதழ்</td><td>i</td><td>சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate</td></tr>
</table></td>
<td>அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Sanitary Certificate | | | | | |
| | | 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | | | |
| | | | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | | | |
| | | | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | | | |
| | | | | iv | மனைப்பிரிவுஅங்கீகாரகட்டணம்<br>Layout Approval Payment | நகராட்சி ஆணையாளர் | | |
| | | | | v | மனைப்பிரிவுஅங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request | | | |
| | | | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work | | | |
| | | | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | | | |
| | | | | viii | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>Planning Permission with Building License Payment | | | |
| | | | | ix | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | | | |
| | | | | x | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுரஅடிக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | | | |
| | | | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | | | |
| | | | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | நகராட்சி ஆணையாளர் | | |
| | | | | xiii | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கோரிக்கை<br>Renewal Building Plan Request | | | |
| | | | | xiv | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கட்டணம்<br>Renewal Building Plan Payment | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | xv | தொழில் வல்லுநர்கள்/டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம்பதிவு - தேடல்<br>Trade Registration - Search | |
| | | ii | தொழில் உரிமம்புதுப்பித்தல் - தேடல்<br>Trade Renewal - Search | |
| 6 | சொத்து வரி<br>Property Tax | i | வரிவிதிப்புமுழுவிவரம்<br>View Assessment History | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரிவிதிப்புக்கான கோரிக்கைமீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

**(ந,க.எண் : 1449/2021/பி1)**

| | | | |
|---|---|---|---|
| 03.12.2021 | 961 | **பொருள் எண்: 22**<br><br>குத்தகை மற்றும் வரியில்லா இனங்கள் குறித்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகை புதுப்பித்தல் குறித்து திருத்திய நடைமுறை அரசு ஆணை(நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளின் படி அம்பாசமுத்திரம் நகராட்சி பேரூந்து நிலைய வணிக வளாக கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகை புதுப்பித்தல் குறித்து கீழ்க்கண்டவாறு நடைமுறைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள் 03.07.2007 ன் – பத்தி 1ல்**<br>1. பொதுவாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் எல்லா அசையா சொத்துகளும் முதலில் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட வேண்டும். அசையா சொத்துக்கள், அக்குத்தகை காலம் முடிந்த பின்னர் மறுபடியும் பொது ஏலத்தில் விடலாமா அல்லது பழைய குத்தகைதாரர்களுக்கே நீட்டிப்பு செய்து வழங்கலாமா என்பதை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளே முடிவு செய்து கொள்ளலாம்.<br>2. அவ்வாறு புதுப்பித்து வழங்கப்படும் குத்தகையினை, புதியதாகக் கருதி அனைத்து நடவடிக்கைகளிலும் முறையான குத்தகை நெறிமுறைகள் | அனுமதிக்கப் பட்டது |

பின்பற்றப்பட வேண்டும்.

3. அவ்வாறு வழங்கப்பட்ட புதிய இனத்திற்கு, அடுத்த மூன்றாண்டுகளுக்கான குத்தகை தொகையினை (மாதாந்திர வாடகை) முந்தைய குத்தகை தொகைக்கு மேல் 15 விழுக்காட்டிற்கு குறையாமல், அந்தப் பகுதிகளில் நிலவி வரும் சந்தை வாடகை மதிப்பிற்கேற்ப உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. மேற்படி குத்தகையினை, குத்தகை உரிமதாரர்களின் வாரிசுகளுக்கு புதுப்பிக்கக் கூடாது. வாரிசுதாரர் வசமிருப்பின், அவ்வசையா சொத்துக்களை உள்ளாட்சி அமைப்புகள் உடன் பறிமுதல் செய்து, பொது ஏலம் மூலம் மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டும்.

**<u>படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள் 03.07.2007 ன் – பத்தி 4ல்</u>**

i) முதல் தடவையாக குத்தகைக்கு விடப்படும் போது நகராட்சியின் அசையா சொத்துக்கள் அனைத்தும் பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்பட வேண்டும்.

ii) நகராட்சிக் கடைகள், ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவி முடிவடைவதன் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே (automatically) புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும் (மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை தொகை 15 (பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும். (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்துவரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்).

iii) ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில், மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகைக் கால அளவை, நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக் கொள்ளவில்லையானால், அச்சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும்.

iv) குத்தகைதாரர்கள் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை குத்தகையை புதுப்பிக்கக் கீழ்க்கண்ட வீதங்களில் கட்டணம் செலுத்த வேண்டும்.

1. < 100 ச.அ – ரூ 500/– (ரூபாய் ஐநூறு மட்டும்)
2. 100 – 500 ச.அ – ரூ 1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்)
3. 500 – 1000 ச.அ – ரூ 1500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்)
4. > 1000 ச.அ – ரூ 2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

v) அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில், ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில், குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித் தரலாம். இதற்காக விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன்பணமாகச் செலுத்த வேண்டும். இது தவிர, கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த அளவு தொகைக்குட்பட்டு, 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும் அவர் செலுத்த வேண்டும்.

1. < 100 ச.அ – ரூ 2500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்)
2. 100 – 500 ச.அ– ரூ 5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)
3. 500 – 1000 ச.அ– ரூ 7500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்)
4. > 1000 ச.அ – ரூ 10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

| | | | |
|---|---|---|---|
| | | vi) முதல் குத்தகைதாரரின் வாரிசுதாரர்கள் அனைத்துப் பாக்கித் தொகைகளையும் செலுத்துவதன் பேரிலும், நகர்ப்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையைச் செலுத்த ஒப்புக் கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டும் அவர்களுடைய பெயரில் குத்தகை உரிமை மாற்றம் பெற உரிமையுடைவராவர். சட்டப்படியான வாரிசுதாரர்கள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயத்திற்கு உட்பட்டவர்களாவர். பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ 500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) ஆக நிர்ணயிக்கப்படும்.<br>vii) நீக்கம்<br>viii) ஆணைகள் பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து, திருத்தியமைக்கப்பட்ட வரம்பு நிபந்தனைகள் பொருந்தும்.<br><br>(ந.க.எண் 1959/2021/எப் 1) | |

**தனி அலுவலர்/ ஆணையாளர்**

**அம்பாசமுத்திரம் நகராட்சி**